<u>மாநகர உள்விளையாட்டரங்கிற்கு</u>
<u>திட்ட உதவியாளர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்தல்</u>

கண்டி மாநகர சபையின் சேவைத் தேவைப்பாட்டின் நிமித்தம், மாநகர உள்ளக விளையாட்டரங்கிற்கு திட்ட உதவியாளர் ஒருவரைப் பெற்றுக்கொள்வதற்காக தகைமையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதற்கமைய, விண்ணப்பங்கள் அடங்கிய உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு, 2026.07.24 ஆம் திகதிக்கு முன்னர் "மாநகர ஆணையாளர், கண்டி மாநகர சபை, கண்டி" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

1. பதவிகளின் எண்ணிக்கை : 01 gjtp

2. வயது : விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து விண்ணப்பதாரர்களின் வயது 18 இற்குக் குறையாமலும் 35 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. மாதாந்தக் கொடுப்பனவு : ரூ. 25000/-

4. கல்வி - ஏனைய தகைமைகள : ஏதேனும் ஒரு பாடத்துறையில் க.பொ.த. (உயர்தர)ப் பரீட்சையில் (சாதாரண பொது ஆங்கிலம் தவிர்ந்த)மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

கணினிப் பயன்பாடு பற்றிய சிறந்த அறிவு காணப்படல் வேண்டும் (கணினி அறிவினைப் பெற்றுக்கொண்டமைக்கான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

மற்றும்

சிங்களம், ஆங்கில மொழி அறிவு காணப்படல் வேண்டும்

மற்றும்

விளையாட்டு நடவடிக்கைகள் தொடர்பான நிறுவனமொன்றில் சேவையாற்றிய முன் அனுபவம் விசேட தகைமையாகக் கருதப்படும்.

5. தெரிவு செய்யும் முறை : விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளவர்களில் இணைத்துக்கொள்வதற்கு அவசியமான அடிப்படைத் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் அனைவரும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர் என்பதுடன், தேவையான அனைத்துத் தகைமைகளையும் பரிசீலித்த பின்னர் உரிய தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்கள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

சேவையினைப் பெற்றுக்கொள்வதற்காகத் தெரிவுசெய்யப்படும் திட்ட உதவியாளர் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படுவார்:

1. உள்விளையாட்டரங்கானது அரசாங்க விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துத் தினங்களிலும் மு.ப. 6.00 மணி தொடக்கம் பி.ப. 10.00 மணி வரை இயங்குவதுடன், சேவை முறை (Shift) அடிப்படையில் ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவர். காலை நேரச் சேவை மு.ப. 6.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரையும், மாலை நேரச் சேவை பி.ப. 2.00 மணி தொடக்கம் பி.ப. 10.00 மணி வரையும் இடம்பெறும். சேவைத் தேவைப்பாட்டின் நிமித்தம் இந்த இரண்டு சேவைகளில் எந்தவொரு சேவையிலும் ஈடுபடக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

2. நாளொன்றிற்கு குறைந்தபட்சம் 08 மணித்தியாலங்கள் சேவையை வழங்குதல் வேண்டும். மாதாந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்கு குறைந்தபட்சம் 21 நாட்கள் வேலை செய்திருக்க வேண்டும்.

3. தான் கடமையில் ஈடுபடும் நேரத்தில் குறித்த சேவை முறையில் (Shift) முழுநேரமும் கடமைகளில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. சேவைத் தேவைப்பாட்டின் நிமித்தம் சில சந்தர்ப்பங்களில் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் சேவைக்காக அழைக்கப்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மேற்குறித்த கொடுப்பனவுக்கு உட்பட்டு சேவையை வழங்க வேண்டும்.

5. சேவை வழங்கல் தொடர்பான 1 வருட காலப்பகுதிக்கான சேவை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும் என்பதுடன், சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் இக்காலப்பகுதி நீடிக்கப்படும்.

6. ஏனைய தகைமைகள் :

- .விண்ணப்பதாரர் கண்டி நகர எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- ஆட்சேர்ப்புக்கான அனைத்துத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உடல் மற்றும் உள ரீதியாகத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் சிறந்த நற்பண்புகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு :- இச்சேவையில் ஈடுபடுத்துவதற்கான விண்ணப்பங்களை கண்டி மாநகர சபையின் www.kandy.mc.gov.lk என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், சேவையைப் பெற்றுக்கொள்வது தொடர்பான இறுதி முடிவு கண்டி மாநகர சபையின் மாநகர ஆணையாளரையே சாரும். விண்ணப்பங்களைக் கோரியதன் பின்னர் அல்லது கோரப்படும் காலப்பகுதியில் இந்த ஆட்சேர்ப்பினைத் தாமதப்படுத்துதல், மாற்றுதல், இந்த அறிவித்தலை இரத்துச் செய்தல், இந்த அறிவித்தலைத் திருத்துதல் தொடர்பான முழுமையான அதிகாரம் கண்டி மாநகர சபையின் மாநகர ஆணையாளருக்கு உண்டு.

2026.07.10

ஏ.எச்.எம். இந்திகா குமாரி அபேசிங்க
மாநகர ஆணையாளர்
கண்டி மாநகர சபை

**<u>மதிரி விண்ணப்பம்</u>**

மாநகர உள்விளையாட்டரங்கிற்கு
திட்ட உதவியாளர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்தல்

01. விண்ணப்பதாரர் வசிக்கின்ற உள்ளூராட்சி நிறுவனம். ..................................................................

02. (அ) முதல் எழுத்துடன் பெயர் (தமிழில்) .........................................................................
(ஆ) முழுப் பெயர் (தமிழில்) ..........................................................................

(இ) முழுப் பெயர் (ஆங்கில் கெப்பிட்டல் எழுத்தில்) ...........................................................

03. தேசிய அடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

04. பிறந்த திகதி :- வருடம் : .....................மாதம் ................... திகதி: ....................

05. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் (2026.07.24) திகதிக்கு வயது :

வருடங்கள் .............. மாதங்கள் ..................... நாட்கள் ...................

06. பால் ............................. ..................................................................................

07. விவாகநிலை : ....................................................................................

08. நிரந்தர முகவரி : ....................................................................................

09. தொலைபேசி இல: ....................................................................................

10. நீங்கள் இலங்கை பிரசையா? : ..................................................................................................

அவ்வாறாயின் பரம்பரை அடிப்படையிலா? பதிவு செய்தல் அடிப்படையிலா? என்ற விபரம்

.......................................................................

11 கல்வித் தகைமைகள்

11. (I) க.பொ..த (சாதாரண தர ) பரீட்சை

ஆண்டு ...................
சுட்டிலக்கம் - ....................

| இல | பாடம் | பெற்றுள்ள சித்தி |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |
| 05. | | |
| 06. | | |
| 07. | | |
| 08. | | |
| 09. | | |
| 10. | | |

11. (II) க.பொ..த (உயர் தரப்) பரீட்சை

ஆண்டு ...................
சுட்டிலக்கம் - ....................

| இல | பாடம் | பெற்றுள்ள சித்தி |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |
| 03. | | |
| 04. | | |

11. பட்டம் அல்லது உயர் பாடநெறிகள் குறித்த விபரம்

..................................................................................................................................

..................................................................................................................................

12. தொழில் தகைமைகள் மற்றும் சேவை அநுபவம்.

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

13. விண்ணப்பதாரரின் அத்தாட்சிப்படுத்தல்

என்னால் மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் சரியாதும் உண்மையானதும் என உறுதிப்படுத்துகின்றேன். மேலே குறிப்பிட்ட விபரங்கள் பொய்யானது என்பதாக நான் சேவைக்கு தெரிவு செய்யப்பட முன்னதாக நிரூபனமானால் நான் நியமனம் பெறத் தகுதியில்லாதவராதுடன், நியமனம் பெற்ற பின்னர் நிரூபனமானால் எந்த ஒரு இழப்பீடும் வழங்கப்படாத நிலையில் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனை அறிவேன்.

திகதி: ............................................

..........................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்